தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | **:** | 251/2019 | சாட்சியம் | **:** | **MW1** |
| **Name** | **:** | திரு. ஐயப்பன் | | | |
| **Date** | **:** | **19.06.2025** | | | |
| **Time** | **:** | **10.46 a.m to 11.18 a.m** | | | |

நி.த.சா.**1.**திரு.ஐயப்பன் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை தொடர்ச்சி

எங்கள் நிறுவனத்தில் நேரடி தொழிலாளர்கள் மறைமுக தொழிலாளர்கள் என்ற வகையில் தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள் என்றால் ஆமாம், நேரடி தொழிலாளர் வகையில் யார் யார் வருவார்கள் என்றால் ஆபரேட்டர்கள் மட்டும் வருவார்கள். மேலாளர், உதவி மேலாளர், ஒப்பந்த தொழிலாளர்கள், டீம் லீடர்ஸ், சூப்பர்வைசர் ஆகியோர் மற்ற வகை தொழிலாளர்கள் ஆவார்கள். தொ.சா.ஆ.33 ல் நேரடி தொழிலாளர்கள் கீழ் டீம் லீடர்கள் மற்றும் கீழ்நிலை பணியாளர்கள் வருவார்கள் என கண்டுள்ளது என்றால் தெரியவில்லை. Executive and above Officers தான் indirect Employees கீழ் வருவார்கள் என்றால் சரியல்ல. எனக்கு Weekly Off உள்ளது. டீம் லீடர் வகையில் உள்ள தொழிலாளர்களுக்கு Weekly Off இல்லை என்றால் ஆமாம். LTA வருடத்திற்கு ஒரு முறை கொடுப்பார்கள். LTA Allowance கொடுப்பதற்கு

பதிலாக ஈடு செய்யும் வகையில் விடுமுறை தான் கொடுப்பார்கள் என்றால் இல்லை Allowance வும் கொடுப்பார்கள். LTA டீம் லீடர்களுக்கு மாத சம்பளத்துடன் சேர்த்து கொடுப்பார்கள் என்றால் ஆமாம். Skill Matrix யார் தயார் செய்வார்கள் என்றால் டீம் லீடர் தயார் செய்வார். என்னிடம் காட்டப்படுவது என் துறையின் கீழ் உள்ள Skill Matrix என்றால் ஆமாம். அது தொ.சா.ஆ.41. இந்த வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் காரணத்தினால் டீம் லீடர் யாரும் Skill Matrix ஒழுங்காக தயாரிப்பது இல்லை. Skill Matrix ல் ஆப்பரேட்டர்களுக்கான Skill Matrix மற்றும் டீம் லீடர்களுக்கான Skill Matrix இரண்டும் கண்டுள்ளது என்றால் ஆமாம். ஆனால் இரண்டும் தனித்தனி தாளில் தான் இருக்கும். Level-4 பூர்த்தி செய்தவர்கள் தான் டீம் லீடர் பணிக்கு பரிந்துரைக்கப்படுவார்கள் என்றால் சரியல்ல. Level-3 பூர்த்தி செய்தாலே போதுமானது. Skill Matrix சூப்பர்வைசர்கள் தான் தயாரிக்கிறார்கள் என்றாலும் நான் சொல்வது போன்று டீம் லீடர்கள் தயாரிப்பது இல்லை என்றால் தவறு. எந்த காலத்திலும் டீம் லீடர்கள் Skill Matrix தயார் செய்தது இல்லை என்றாலும் வழக்கு நிலுவையில் இருக்கும் காரணத்திற்காக ஒழுங்காக தயாரிப்பதில்லை என தவறான சாட்சியத்தை முன்வைக்கிறேன் என்றால் தவறு. என்னிடம் காட்டப்படுவது நான் அட்மின்னாக இருக்கும் வாட்ஸ் அப் குரூப்பில் உள்ள Chat என்றால் ஆமாம். அது தொ.சா.ஆ.42. 07.06.2025 அன்று நான் தான் தொழிலாளர்களின் சிப்ட் ஷெட்யூல் அனுப்பி வைத்தேன் என்றால் ஆமாம். பூமலை என்ற ஆப்பரேட்டர் என் கீழ் வேலை பார்க்கிறார் என்றால்

ஆமாம். என்னிடம் காட்டப்படுவது அவர் கொடுத்த விடுப்பு விண்ணப்பம் படிவம் என்றால் ஆமாம். அது தொ.சா.ஆ.43. அந்த விண்ணப்பத்தில் அவருக்கு விடுப்பு வழங்கி நான் தான் கையெழுத்து போட்டு உள்ளேன் என்றாலும் டீம் லீடர் போடவில்லை என்றாலும் ஆமாம். டீம் லீடர் அவரின் பணியை செய்யவில்லை என்ற காரணத்தினால் நான் செய்தேன். டீம் லீடர் அவர் பணியை சரிவர செய்யவில்லை என தெரிவித்து நிர்வாகத்திற்கு புகார் கொடுத்து உள்ளேனா என்றால் கொடுத்திருக்கிறேன். எந்த டீம் லீடருக்கு எதிராக கொடுத்தேன் என்றால் சரவணன் என்ற டீம் லீடருக்கு எதிராக கொடுத்தேன். பூமாலை எந்த டீம் லீடர் கீழ் வேலை பார்த்தார் என்றால் சுரேந்திரன் என்பவர் கீழ் வேலை பார்த்தார். சுரேந்திரனுக்கு எதிராக நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. எந்த காலகட்டத்திலும் டீம் லீடர்களுக்கு விடுப்பு வழங்குவதற்கான அதிகாரம் இருந்தது இல்லை என்றாலும் அதனை எக்ஸிக்யூட்டிவ் நிலையில் உள்ள அதிகாரிகள் தான் செய்வார்கள் என்றாலும் வழக்கிற்காக டீம் லீடர் விடுப்பு வழங்கும் அதிகாரம் பெற்றவர் என தவறான சாட்சியத்தை முன் வைத்தேன் என்றாலும் சரியல்ல. என்னிடம் காட்டப்படுவது Pre-Operation Checklist என்றால் ஆமாம். அது தொ.சா.ஆ.44. Pre-Operation Checklist ல் அசோக் குமார் என்ற டீம் லீடர் மிஷின் செட்டிங் செய்து உள்ளார் என்றால் இல்லை கைடு தான் செய்திருக்கிறார். 30.04.2025 அன்று அசோக்குமார் தான் மெஷின் செட்டிங் செய்து இருக்கிறார் என்றால் இல்லை. லோகேஷ் என்பவர் தான் செய்திருக்கிறார். டீம் லீடர் அன்றைய தினம் Machine Setting, Change

Over, Gauge Setting செய்திருக்கிறார் என்றால் இல்லை. அந்த வேலைகளை செய்ய ஆப்பிரேட்டர்களுக்கு கைடு தான் செய்திருக்கிறார். சூப்பர்வைசரின் வேலை என்ன என்றால் ஆப்பரேட்டர்கள் மற்றும் டீம் லீடர்களின் பாராமீட்டர் சரியாக உள்ளதா என சரி பார்ப்பார். என்னிடம் காட்டப்படுவது Cell Production Summary என்றால் ஆமாம். அது தொ.சா.ஆ.45. சரவணன் என்ற டீம் லீடர் இயந்திரங்களை இயக்கியிருக்கிறார் மற்றும் உற்பத்தி வேலையிலும் ஈடுபட்டு இருக்கிறார் என்றால் ஆமாம். அவரை ஒரு லைனில் இருந்து வேறொரு லைனிற்கு மாற்றிய காரணத்தினால் புதியதாக செய்த லைனில் உள்ள வேலைகளை தெரிந்து கொள்ள வேண்டி அவர் அந்த வேலைகளை செய்ய எத்தனிக்கப்பட்டார். நான் சொல்வது போன்று அவர் ஒரு லைனில் இருந்து வேறு லைனுக்கு மாற்றப்படவில்லை என்றாலும் அவருடைய பொதுவான வேலையை தான் அவர் செய்தார் என்றாலும் தவறு. Referral Award பற்றி தெரியாது. நான் பிரமாண வாக்குமூலம் பத்தி 5 டீம் லீடர்கள் மேற்பார்வை பணியில் தான் ஈடுபடுவார்கள் உற்பத்தி பணியில் ஈடுபட மாட்டார்கள் என சொல்லியுள்ளதற்கு ஆதாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பிரமாண வாக்குமூலம் பத்தி 8ல் சொல்லி உள்ளது போன்று டீம் லீடர்கள் சரிவர வேலை செய்யாததற்கு எதிராக புகார் எதுவும் கொடுக்கப்பட்டு நிர்வாகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் புகார் கொடுக்கப்பட்டது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. சாட்சியத்தில்

சொல்லியுள்ள விவரங்களுக்கு ஆதாரம் தாக்கல் செய்யாத காரணத்தினால் அது செல்லதக்கது அல்ல என்றால் சரியல்ல.

S SUJATHA

Presiding Officer, Labour Court
Digitally signed by S SUJATHA
Location: Kancheepuram
Date: 2025.06.19 13:40:38 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:19.06.2025.